**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 57 /2024</u>**

**2026 –ம் வருடம் மார்ச் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. லக்ஷ்மணன் த/பெ. ராஜு வயது. 65 ஊர். புது கோத்தகிரி**

**-----------------------------------------------------------------------**

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>PW1 குறுக்கு விசாரணை 04.25 P.M.</u>**

1. நான் தாக்கல் செய்த வழக்கில் புதிய சர்வே எண். 1162/2 ன் உரிமையாளர் என்று கூறியுள்ளதை நிரூபிக்கும் வகையில் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிட்டா மற்றும் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன பத்திரம் என்னுடைய பெயரில் உள்ளதா என்றால் என் பாட்டி மாதியம்மாவின் தம்பி கிருஷ்ணன் பெயரில் உள்ளது. என் தந்தை ராஜு தற்போது உயிருடன் இல்லை. என் தந்தை ராஜுவின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மாதியம்மாள் என் அப்பாவின் தாய் ஆவார். மாதியம்மாவின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம்தான் நான் மேற்படி

சொன்ன கிரைய பத்திரம் வா.த.சா.ஆ.1 ஆகும். இந்த கிரைய பத்திரத்தில் சொத்து வாங்கியவர் கணவன் மகன் கிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை விற்றவர் ஜடய கம்பட்டன் மகன் கவுந்தன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய பாட்டியின் சகோதரர் கிருஷ்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழோ, வாரிசு சான்றிதழோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. கிரைய பத்திரம் வா.த.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள கிருஷ்ணன் என்பவர்தான் என் பாட்டி மாதியம்மாளின் சகோதரர் என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். கிரைய பத்திரம் வா.த.சா.ஆ.1ல் உள்ள கிருஷ்ணனுக்கும் நான் சொல்லும் என் பாட்டியின் சகோதரர் கிருஷ்ணனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பந்தம் உள்ளது. மெமோரண்டம் வா.த.சா.ஆ.4ல் என் பாட்டி மாதியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து அதில் காட்டப்பட்டதா என்று சொன்னால் காட்டியுள்ளது.

3. மெமோரண்டத்தில் என் பாட்டி மாதியம்மாளுக்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றும், அந்த வரைபடத்தில் மாதியம்மாளுக்கு என்றும் எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்பதால்தான் அதில் கையெழுத்தும் போடவில்லை என்றால் சரியல்ல. மாதியம்மாள் கணவர் சள்ளன் கையெழுத்து செய்துள்ளார். மாதியம்மாள் கணவர் சள்ளன் கையெழுத்து செய்துள்ளார் என்ற விவரத்தை எனது வழக்கிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பிரதிவாதிகள் வழக்கிலும், முதல் விசாரணையிலும் கூறாமல் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. நான் தாக்கல் செய்த வாதுரையில் கூறியபடி தாவா அட்டவணையில் உள்ள பழைய சர்வே எண்.1486/1A & D 264B, புதிய சர்வே எண். 1162/2ல் 8 செண்ட் இடம் நான் குறிப்பிட்டுள்ள செக்குப் பந்தியில் எனக்கு பாத்தியப்பட்டது என ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.த.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளேன். 01.01.1976ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை யார் யாருக்குள் நடந்தது என்றால் நாங்கள் எங்கள் குடும்பத்திற்குள், பஞ்சாயத்தார் 4 பேர் முன்னிலையில் வைத்து பிரித்துக்கொண்டோம். அந்த குடும்பத்தார் யார் யார் என்றால் நானும், எனது தாயார் புய்யம்மாள், என் அண்ணன் காமராஜ், எனது தம்பி வெங்கடேஷ் மற்றும் எனது சித்தப்பா கிருஷ்ணன் ஆகியோர்கள் பிரித்துக்கொண்டோம்.

4. அந்த பஞ்சாயத்தார் 4 பேர் யார் யார் என்றால் M.Y. கவுந்தன், B.ஆங்காரன், A. நடராஜ கம்பட்டன், K.K.மாங்காளி ஆவார்கள். பஞ்சாயத்தார் முன்னிலையில் பாகப்பிரிவினை நடந்தது என்று வழக்கிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்பதால் தான் பஞ்சாயத்தார் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இந்த வழக்கை சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டிக்கும் சம்மந்தம் இருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், தாவா சொத்திற்கும் எனது பாட்டிக்கும் எந்த

சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.7 எப்போது யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் 02.11.2024ல் என்னால் தயார் செய்யப்பட்டது. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் நான்தான் கொடுத்தேனா என்றால் என்ஜினியர் உதவியுடன் நான் கொடுத்ததன்பேரில் வரைந்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வரைந்து கொடுத்த என்ஜினியர் பெயர் செல்வராஜ், அவர் அரவேனுவில் உள்ளார். என்ஜினியரின் வீடு மற்றும் அலுவலக முகவரி எனக்கு தெரியாது. வரைபடத்தில் உள்ள கையெழுத்துக்கும் எல்லைகள் எழுதிய கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். நான் செக்குப்பந்தி எழுதினேன், அவர் மற்ற அளவுகளை எழுதினார். யாரோ ஒருவர் உதவி செய்யவேண்டும் என்று எனக்கு இந்த வரைபடத்தை வரைந்து கொடுத்துள்ளார் என்றாலும், நான் சொல்வதுபோல் 8 சென்ட் இடம் இல்லவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**Sd/– G. Amirdham, 13.03.2026**
**District Munsif,**
**Kotagiri.**